**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 76 / 2021** |
| **Deposition of witness for** | : | **PW : 2** |
| **Name** | : | **திரு. மதன்மோகன்** |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.06.2022**

**முதல் விசாரணை :**

நான் மதுரை மாவட்டம், பேரையூர், துள்ளுக்குடி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். திருநகர், கூட்டுறவு சொசைட்டியில் வேலை செய்கிறேன். அசா1 எனது அப்பா சின்னச்சாமி ஆவார். ஆஜர் எதிரிகளைத் தெரியும். 1 வது எதிரி 2,3 எதிரிகள் மகன் ஆவார். ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் தான். கடந்த 25.01.2020 ம் தேதி அன்று இரவு சுமார் 07.05 மணிக்கு எனது அப்பா எனக்கு போன் செய்து, அம்மாவுக்கு உடல் நிலை சரியில்லை என்று தகவல் சொன்னார். நான் என்ன ஆயிற்று அப்பா என்று கேட்டேன். நான் உடனே எனது அம்மாவைப் பார்க்க எனது அம்மா வீட்டிற்கு போனேன். எனது வீடு எனது அம்மா வீட்டில் இருந்து 15 வீடுகள் தள்ளி தான் உள்ளது. எனது அம்மாவிடம் என்ன நடந்தது என்று கேட்தற்கு, அம்மாவை சதீஷ் என்பவர் கம்பால் அடித்து விட்டதாகவும், எனது அம்மா பலசரக்கு வாங்குவதற்கு அன்று மாலை 06.30 மணிக்கு மேல் எங்கள் வீட்டின் பக்கத்தில் இருக்கும் முருகன் என்பவர் கடைக்கு சென்றுள்ளார். எங்கள் அம்மா திரும்பி வரும் போது எங்கள் உறவின் முறைக்கு

பாத்தியப்பட்ட திருமணமகாலுக்கு சாக்கடை கட்டுவதற்காக கால்வாய் தோட்டப்பட்டிருந்தது. அதை கடந்து செல்வதற்காக கல் போட்டு இருந்தார்கள். அந்த கல்லை கடந்து செல்வதற்கு சதீஷ்என்பவர் வழி மறித்து அந்த கல்லில் காலை வைத்து வழியை மறைத்து நின்றுகொண்டு இருந்தார். அவரிம் எனது அம்மா தம்பி காலை எடுப்பா என்று சொல்லியுள்ளார். அப்போது நான் உன்னை வீம்பு செய்வதற்காகத்தான் காலை வைத்திருக்கிறேன் என்றும், நீ வேறு பாதைவழியா சென்றுவாடி தேவடியா என்று சதீஷ் சொன்னார் என்றும், அதற்கு எனது அம்மாவும், நான் உனக்கு பெரியம்மா என்று 1 வது எதிரியிடம் கேட்டார் என்றும், பக்கத்தில் உள்ள மாரியப்பன் என்ற பையனும் ஏன்டா கால் வைச்சிறுக்க, பெரியம்மா வருதுல, காலை எடுத்தால் அம்மா போகும்ல என்று சொல்லியுள்ளார் என்றும், அதன் பிறகு எனது அப்பா சிறுநீர் கழிப்பதற்காக வெளியே வந்தார் என்றும், அப்போது சண்டை சத்த்ம கேட்டதாகவும், எனது அப்பா அங்கு சென்றதாகவும் என்னிடம் எனது அப்பா சொன்னார். அப்போது, எனது அம்மாவை பொன்னுமாரி, முடியைப் பிடித்து இழுத்தாகவும், ராமர் என்பவர் காலால் எனது அம்மாவை எத்தியதாகவும், எனது அம்மாவை சதீஷ் என்பவர் கட்டையால் அடித்ததாகவும், அப்போது பொன்னுமாரி எனது அம்மாவை கட்டையால் அடித்துக் கொல்லுங்கடா என்று சொன்னதாக எனது அம்மா என்னிடம் கூறினார். அப்போது எனது அப்பாவும் மாரியப்பன் என்பவரும் கைத்தாங்கலாக எனது அம்மாவை வீட்டிற்கு அழைத்து வந்துள்ளார்கள். கொஞ்ச தூரம் வந்தவுடம் மாரியப்பனை எனது அப்பா, நான் பார்த்துக்கொள்கிறேன் என்றும், நீ வீட்டுக்கு போடா தம்பி என்றும் சொல்லி அனுப்பியுள்ளார். எங்கள் வீட்டிற்கு எனது அம்மா, அப்பா வந்தவுடன், எனது மூத்தமகள் தேவஸ்ரீ, அங்கு வீட்டில் இருந்தார். அப்போது, எனது அப்பா, அப்பத்தாளுக்கு தண்ணீர் குடுமா என்று சொன்னார். அப்போது எனது மகள் தண்ணீர் கொண்டுவந்து கொடுத்த போது நான் எனது அம்மா வீட்டிற்குள் அன்று இரவு சுமார் 07.00 மணிக்கு சென்றேன். அப்போது தான்

எனது அம்மா என்னிடம் நடந்த சம்பவங்கள் பற்றி என்னிடம் கூறினார். அதற்கு பிறகு எனது அம்மாவை ஆட்டோவை வரச்சொல்லி எனது அப்பாவும், நானும் ஆட்டோவில் ஏற்றிச் சென்று M கல்லுப்பட்டி சென்றோம். அப்போது, M கல்லுப்பட்டி காவல்நிலையத்தில் ஆட்டோ வை நிறுத்திவிட்டு, நானும் எனது அம்மாவும் ஆட்டோவில் இருந்து கொண்டோம். எனது அப்பா, காவல் நிலையத்திற்குள் சென்று SI சங்கையா அங்கு இருந்தார். அப்போது அம்மாவை நீங்கள் ஆஸ்பத்திரியில் சேருங்கள், நான் அப்புறம் வந்து கம்ப்ளைண்டு வாங்கிக்குறேன் என்று SI சொல்லி எங்களை அனுப்பிவிட்டார். M கல்லுப்பட்டி ஆஸ்பத்திரிக்கு சென்றோம். மருத்துவமனையில் எனது அம்மாவிற்கு முதல் உதவி செய்துவிட்டு, உசிலம்பட்டி பாலா மருத்துவமனைக்கு கொண்டு செல்லுங்கள் என்று சொன்னார்கள். அதன் பின்னர் உசிலம்பட்டி பாலா மருத்துவமனைக்கு எனது அம்மாவை கொண்டு செல்லும் போது பக்கத்தில் உள்ள T ராமநாதபுரம் செல்லும் வரை எனது அம்மா என்னிடம் பேசி வந்தார். அதற்கு பிறகு எனது அம்மாவிற்கு வாந்தி வந்தது. அதற்கு பிறகு எனது அம்மா பேச்சு சுயநலம் இழந்து, என்னிடம் பேசவில்லை. நாங்கள் பாலா மருத்துவமனைக்கு எனது அம்மாவை கொண்டுசென்றோம். அங்கு 25.01.2020 அன்று பாலா மருத்துவமனையில் எனது அம்மாவை சேர்த்தோம். 26.01.2020 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் எனது அம்மாவிற்கு உடல்நிலை ரெம்ப மோசமாக உள்ளது என்று சொன்னார்கள். அதன் பிறகு எனது அம்மாவை நாங்கள் மதுரை சிம்மக்கல், VN மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு 26.01.2020 ம் தேதியன்று சேர்த்தோம். அதன் பிறகு அங்கேயும் எனது அம்மாவின் உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது என்று சொன்னார்கள். அதற்கு பிறகு மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு எனது அம்மாவை கொண்டு சென்றோம். 27.01.2020 அன்று மாலை சுமார் 06.00, 07.00 மணிக்குள் சென்று சேர்த்தோம். ICU வார்டில் தான் 103 வார்டில் எனது அம்மாவை சேர்த்தோம். 28.01.2020 ம் தேதியன்று அதிகாலை சுமார் 01.30 மணியளவில் சார்பு ஆய்வாளர் புகார் வாங்க

வந்தார். அன்று காலை 11.00 மணியளவில் எனது அம்மா உயிர் இழந்தார். அதன் பிறகு எனது அம்மா 29.01.2020ம் தேதியன்று பிரேத பரிசோதனை செய்ய கொண்டு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்..

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

என் அம்மா கடைக்கு போன விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது. சாக்கடை கட்டிக்கொண்டிருந்தார்கள் என்றும், 1வது எதிரி கல்லில் காலை வைத்து மறித்து உட்கார்ந்திருந்த விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது. மாரியப்பன், பெரியம்மா வருதுப்பா, காலை எடு என்று சொன்ன விபரம் பற்றி எனக்கு நேரடியாகத்தெரியாது. எனது அம்மா சொல்லித்தான் தெரியும். கெட்ட வார்த்தை சொல்லி எனது அம்மாவை திட்டிய விபரமும், கட்டையை வைத்து அடிக்க சொன்ன விபரமும் எனக்கு நேரடியாகத் தெரியாது. அதே போல் எனது அம்மாவை முடியைப் பிடித்து இழுத்த விபரமும் நேரடியாகத் தெரியாது. மாரியப்பனை எனது அப்பா, நீ வீட்டுக்குபோப்பா என்று சொல்லிவிட்டு எனது அம்மாவை கைத்தாங்கலாக வீட்டிற்கு கூட்டி வந்த விபரம் பற்றி நேரடியாகத் தெரியாது. நானும், எனது அம்மாவும், ஆட்டோவில் இருந்தோம், எனது அப்பா காவல் நிலையம் சென்றுபோது, சார்பு ஆய்வாளர் சங்கையா இருந்தார் என்று விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நான் முதல் விசாரணையில் சொன்ன அனைத்து விபரங்களையும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன். நாங்கள் எனது அம்மாவை M கல்லுப்பட்டி மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்வரை எனது அம்மா என்னுடன் பேசிக்கொண்டுதான் இருந்தார். சார்பு ஆய்வாளர் சங்கையா எனது அம்மாவை பார்த்து விசாரணை செய்யவில்லை. சம்பவம் குறித்து என் அப்பாவை விசாரித்தார். எனது அப்பாவை விசாரித்து பதிவு செய்யவில்லை. என்னிடம் சம்பவம் பற்றி சார்பு ஆய்வாளர் சங்கையா விசாரணை செய்யவில்லை. எனது அம்மாவை மதுரை அரசு மருத்துவமனையில் நானும் எனது அண்ணனும் தான் சேர்த்தோம். அப்போது எனது அம்மா பேச இயலாத நிலையில் இருந்தார். என்னை

மருத்துவமனையில், மருத்துவர், எனது அம்மாவுக்கு என்ன காயம், என்ன ஆயுதத்தால் தாக்கப்பட்டார் எங்கு வைத்து தாக்கப்பட்டார் என்ற விபரங்களை என்னிடம் கேட்டார். நான் மருத்துவரிடம், 3 பேர், எங்கள் வீட்டின் முன்பு வைத்து கையால் தாக்கியதால் எனது அம்மாவிற்கு காயம் ஏற்பட்டதாக சொன்னேனா என்றால் இல்லை. இந்த வழக்கு சம்பந்தமாக என்னை முதன்முதலில் மருத்துவர் தான் விசாரணை செய்தார். மருத்துவரிடம் நான் உண்மையைச் சொன்னேனா பொய்யைச் சொன்னேனா என்றால் உண்மையைத்தான் சொன்னேன். VN மருத்துவமனை மதுரை, சிம்மக்கல்லில் உள்ளது. ஏற்கனவே எனது அம்மாவிற்கு, VN மருத்துவமனை மருத்துவர் நாகராஜன் என்பவர் மருத்துவம் பார்த்திருக்கிறார் என்றால் இல்லை. எனது அம்மா, அடிக்கடி வலிப்பு நோயால் அடிக்கடி கீழே விழுந்துவிடுவார் என்பதால் தான் நாங்கள் VN மருத்துவமனைக்கு எனது அம்மாவை சேர்த்தோம் என்றால் சரியல்ல. மருத்துவர் நாகராஜன் நரம்பியல் மருத்துவர் என்பதால் அவரிடம் சிகிச்சை எடுத்தோம் என்றால் சரியல்ல. எனது அப்பா, எனது அம்மாவிற்கு நான் பிறப்பதற்கு முன்பு வலிப்பு நோய் லேசாக வரும் என்று சொன்னார். அன்றைய தினம் வலிப்பு நோயால் எங்கள் வீட்டில் கீழே விழுந்து எனது அம்மாவிற்கு காயம் ஏற்பட்டது என்று எனது அப்பா சொல்லவில்லை. எனது அம்மாவிற்கு ஏற்பட்ட காயம் நோயினால் ஏற்பட்டது என்பதால் தான், நாங்கள் காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. M கல்லுப்பட்டிக்கு சென்றபோது அங்கிருந்த மருத்துவர் பெயர் எனக்குத் தெரியாது. அந்த மருத்துவர் நடத்தும் கிளினிக் பெயர் என்னவென்று நான் அவசரத்தில் பார்க்கவில்லை. அந்த மருத்துவர் M கல்லுப்பட்டியில் சுமார் 5,6 வருடங்களாக கிளினிக் வைத்து நடத்திவருகிறார். நாங்கள், T.ராமநாதபுரம், நாகையாபுரம், திருமங்கலம் வழியாக மதுரைக்கு வரவில்லை. T.ராமநாதபுரத்தில் இருந்து உசிலம்பட்டி பாலா மருத்துவமனைக்கு வரும் வழியில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனை உள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனது அம்மா T ராமநாதபுரத்திலேயே எனது அம்மாவிற்கு பேச இயலாமல் போய்விட்டது. உசிலம்பட்டி அரசு

மருத்துவமனை, உசிலம்பட்டி டு பேரையூர் மெயின்ரோட்டில் உள்ளது. உடனே எனது அம்மாவை உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு கொண்டுசெல்லவில்லை. உசிலம்பட்டி பாலா மருத்துவமனையில், நீங்கள் உடனே மதுரை பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு செல்லுங்கள் என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல. மதுரைக்கு கொண்டு செல்லுங்கள் என்று சொன்னார்கள். மதுரையில், அரசு மருத்துவமனையானது, எல்லா நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கக்கூடிய அளவு வசதிகள் கொண்ட பெரிய மருத்துவமனை என்று எனக்குத் தெரியும். மதுரை, அரசு மருத்துவமனைக்கு எனது அம்மாவை கொண்டு செல்லாமல், VN மருத்துவனைக்கு கொண்டு சென்றதற்கு காரணம் அங்கு மருத்துவர் நாகராஜன்ஏற்கனவே எனது அம்மாவிற்கு சிகிச்சை அளித்தவர் என்பதால் கொண்டு சென்றோம் என்றால் சரியல்ல. எனது அம்மாவை ஆட்டோவில் கொண்டு சென்ற ஆட்டோ ஓட்டுநர் பெயர் தெரியாது. அவரை அடையாளம் தெரியும். M கல்லுப்பட்டி வரை நாங்கள் எனது அம்மாவை ஆட்டோவில் தான் கொண்டுவந்தோம். எனது அண்ணன், உசிலம்பட்டியில் இருந்தார். M கல்லுப்பட்டி மருத்துவமனை வரை அவர் எங்களுடன் வரவில்லை. எனது அப்பாவிற்கு கை,கால் கொஞ்சம் ஆட்டம் கொடுக்கும் என்றால் அவர் சுகர் பேஷண்ட். எனது அப்பா வயோதிகத்தின் காரணமாக ஆட்டமாக இருக்கும். சம்பவ சமயத்தில் எனது அப்பா சக்கரை நோயினால் பாதிக்கப்பட்டிருந்தார். எனது உடன் பிறந்த சகோதரி, எனது அண்ணன் ஆகியோர் தனியாக எனது அம்மாவை பார்க்க வந்தார்கள். எனது அம்மா கடைசிவரை பேசவில்லை. நான் தகவல் தெரிந்து, நாங்கள் மதுரை அரசு மருத்துவமனைக்கு போகிறோம் என்று M கல்லுப்பட்டி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் சங்கையாவிடம் சொல்லிவிட்டுத்தான் சென்றோம். அன்றைய தினமோ, மறுநாளோ சங்கையா மருத்துவமனைக்கு வரவில்லை. தொலைபேசி மூலம் என் அண்ணனுடன் சார்பு ஆய்வாளர் சங்கையா பேசினார். எனது அம்மாவின் நிலை மோசமாக உள்ளது என்று சார்பு ஆய்வாளர் சங்கையாவிடம் தகவல் சொன்னோம். அதன் பிறகும் சங்கையா அங்கு வரவில்லை. மதுரை அரசு ராஜாஜி

மருத்துவமனையில் இருந்து தகவல் சொல்லி, அரசு மருத்துவமனையில் உள்ள காவல் நிலையத்தில் இருந்து வந்து எங்களை விசாரித்தார்கள். 27.01.2020 ம் தேதி நான் எனது அம்மாவை மதுரை அரசு மருத்துவமனையில் சேர்த்த அன்றே, எனது அண்ணனை மதுரை அரசு மருத்துவமனையில் உள்ள காவல்நிலையத்தினர் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அதில் எனது அண்ணன் கையொப்பம் இட்டார். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது. நான் சொன்னது போல் எந்த ஒரு சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எனது அம்மாவோ, எனது அப்பாவோ எதிரிகள் தாக்கியதாக என்னிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஏற்கனவே எங்கள் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் இடையே இடப்பிரச்சனை இருந்து வந்தது என்றும், அதனால் எனது அப்பா சொல்லிக்கொடுத்தன் பேரில் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் திருநகர், கூட்டுறவு ஹவுசிங் சொசைட்டியில் வேலை செய்கிறேன். அதற்கென்று தனியாக bylaw உள்ளது. அதில் பணிபுரிபவர்கள், பணிபுரியும் இடத்திற்கு அருகே குடியிருக்க வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது. எனக்கு திருநகரில் தனியாக வீடு இல்லை. வேலை நாட்களில் முழுவதும் நானும் எனது அண்ணனும் திருநகரில் இருந்துகொள்வோம் என்றால் சரியல்ல. காலை வேலைக்கு வந்துவிட்டு மாலை வீட்டிற்கு வந்துவிடுவேன். 25.01.2020 ம் தேதி வேலை நாள் என்றும், அன்றைய தினம் நான் திருநகரில் வேலையில் தான் இருந்தேன் என்றும், பின்னர் தகவல் தெரிந்து, எனது அம்மாவை சென்று பார்த்து மருத்துவமனையில் சேர்த்தேன் என்றால் சரியல்ல. அன்று சனிக்கிழமை அரைநாள் தான் வேலைநாள். 1 வது எதிரியோ, 2 வது எதிரியோ நான் சொன்னது போன்று எனது அம்மாவை

தாக்கவில்லை என்றாலும், அதனால் எனது அம்மாவிற்கு காயம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 76 / 2021** |
| **Deposition of witness for** | : | **PW : 3** |
| **Name** | : | திரு. மாரியப்பன் |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.06.2022**

**முதல் விசாரணை :**

நான் துள்ளுக்குடியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள். 25.01.2020 ம் தேதி மாலை சுமார் 06.00, 06.30 மணியளில் நானும் 1 வது எதிரி சதீஷ் என்பவரும் மண்டபத்தில் உட்கார்ந்திருந்தோம். அப்போது முருகன் கடைக்கு சென்று காய் வாங்கிவிட்டு எனது பெரியம்மா அங்கம்மாள் திரும்பி வந்தார். 1 வது எதிரி எனது பெரியம்மாவை சுத்திப்போம்மா என்று சொன்னான். அதற்கு அங்கம்மா, அப்படித்தான் போவேன் என்று சொன்னார். பெரிய வாய்க்கால் உள்ளது, அதைச் சுற்றி போக முடியாது, இப்படித்தான் போவேன் என்று சொல்லி வாய் தகறாறு ஏற்பட்டது. அங்கம்மாளை நான் வீட்டுவரை வா பெரியம்மா என்று சொல்லி கூட்டிச் சென்றுவிட்டுவந்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

**<u>அரசு தரப்பில் கு.வி.</u>**

போலிசார் விசாரணையில், கடந்த 25.01.2020 ம் தேதி சமூதாய மண்டபத்தில் நானும் 1 வது எதிரியும் உட்கார்ந்து இருந்தோம். அப்போது, அங்கம்மா வந்தார். வாய்தகராற்றின் போது, 1 வது எதிரி அங்கு கிடந்த விறகு கம்பை எடுத்து அங்கம்மாளின் பின் தலையில் அடித்தார் என்றால் சரியல்ல. அந்த சத்தத்தைக் கேட்டு, அங்கம்மாளின் கணவர் சின்னச்சாமியும், செல்வரதியும் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் சரிதான். சின்னச்சாமி தான் அவரது மனைவி அங்கம்மாளை கைத்தாங்கலாக வீட்டிற்கு அழைத்துச் சென்றார் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் 1 வது எதிரி விறகு கம்பை எடுத்து அங்கம்மாளின் பின் தலையில் அடித்தார் என்றும், அதை நான் பார்த்தேன் என்றும், தற்போது எதிரிகளைக் காப்பாற்ற எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் கு.வி.</u>**

முருகன் கடையில் இருந்து, அங்காம்மாளின் வீட்டிற்கு, மயானப்பாதை வழியாக செல்வது பக்கம் என்றால் சரிதான். மயாணப்பாதையில் சாக்கடைக் குழி எதுவும் தோன்டவில்லை. மயாணப்பாதையில் மின்சார தெருவிளக்குகள் உள்ளது. சாக்கடைத் தோண்டப்பட்ட சந்துவழியாக ஏன்மா வர்ற, உன்னால இதை தாண்ட

முடியாது என்றும் மயாணபாதை வழியாக போகுமாறு 1 வது எதிரி சொன்னதால் அங்கம்மாள் கேட்காததால் தான் வாய்தகராறு வந்தது. அங்கம்மாள் வலிப்பு நோயால் அடிக்கடி அவதிப்படுவார் என்றால் சரிதான். 1 வது எதிரி சதீஷ்க்கும், அங்கமாளுக்கும் எந்த தகராறும் சண்டை நடக்கவில்லை என்றும் போலிசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை